முதலாவது இதழ்  தை - ஆனி 2020

# கலை வரலாறு

காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

கலைவட்டம், நுண்கலைத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலை வரலாறு: காண்பியக்கலை, காண்பியப் பண்பாடு, மரபுரிமை என்பவற்றுக்கான ஆய்வேடு

இதழாசிரியர்கள்
யோகலிங்கம் நிசாந்தன்
திருமதி. ஸ்ரீபன் கிருபாலினி
கலாநிதி. தாமோதரம்பிள்ளை சனாதனன்

உதவி
பிரிந்தா குலசிங்கம்
திவானி கந்தசாமி

- கட்டுரைத் தொகுதி ஒன்று என்ற வகையில் அனைத்து உரிமைகளும் கலைவட்டத்திற்கும் நுண்கலைத்துறைக்கும் உரியது.
- சகல மூலக் கட்டுரைகளினதும் உரிமை அந்தந்தக் கட்டுரைகளின் மூல ஆசிரியர்களுக்கு உரித்தானதாகும்.
- சகல மொழிபெயர்ப்புகளினதும் உரிமை மொழிபெயர்ப்பாளர்களுக்கு உரியதாகும்.

# யாழ்ப்பாணத்தில் மரியாள் வழிபாடும், வடிவங்களும்

ஆதித்தன் ஜேஸ்மின் கார்மேலா, ஸ்ரீபன். கிருபாலினி

**முன்னுரை**

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை........." எனும் பண்பாட்டிற்குச் சொந்தமானவர்களாகிய நாம் தாய்மையைப் போற்றி வளர்க்கும் பண்பினைக் கைக்கொண்டு வாழ்பவர்கள் ஆகும். இயற்கையாயினும், தேசமாயினும், கலைகளாயினும் நாம் அன்னையாகவே உருவகித்து நோக்குகிறோம். தாய்மையே உலகத்தையும், உயிர்களையும், உணர்வுகளையும் இணைக்கும் உன்னத பண்பு, அவ்வகையே தாய்மை என்பது உடலளவில் உருவாகும் நிலை மட்டுமன்றி உள்ளத்தின் உணர்வுகளால் உருவெடுப்பதும் ஆகும்.

"இனக் குழுச் சமுதாயத்தின் தொடக்க காலந் தொட்டு செழுமையின் அடையாளமாகவும், வலிமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டு பெண் வணங்குதற்கும் வழிபாட்டிற்கும் உரியவளானாள். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெண் தெய்வப் பெயர்கள், பெண் தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகள் நிறைந்து காணப்படுகின்றன."[1] மனித உயிர்கள் அனைத்தையும் பெற்றெடுத்தவள் என்ற அடிப்படையில் பெண் தாய்த் தெய்வமாகவும், என்றும் மாறாத, அழியாத கன்னித் தன்மையுடையவள் என்ற அடிப்படையில் கன்னித் தெய்வமாகவும் போற்றும் பெண் தெய்வ வழிபாட்டு மரபு எல்லாப் பண்பாடுகளிலும் காணப்படுகின்றன. குறிப்பாகக் கீழைத்தேய மரபில் இந்து மதப் பண்பாட்டில் மாரியம்மன், பேச்சியம்மன், கண்ணகித்தாய்...என எண்ணற்றதாகத் தாய்த் தெய்வங்களின் வடிவங்களும் வழிபாடும் மலிந்து காணப்பட்டாலும், கன்னித் தெய்வ வழிபாடு மிகச் சொற்பமாகவே கைக்கொள்ளப்படுகின்றது. அதற்கு ஏழு கன்னிமார் வழிபாடு எடுத்துக்காட்டாகும். இதேபோல மேற்கத்தியத்தில் பெண் தெய்வ வழிபாட்டை ஏற்றுக்கொண்ட மதங்களில் ஒன்றாகிய கிறிஸ்தவ மதப் பண்பாட்டில் தாய்த் தெய்வம், கன்னித் தெய்வம் எனும் இரு வழிபாட்டுக்கும் பொருந்தத்தக்கவர் 'கன்னி மரியாள்' (Virgin Mary) ஆகும்.

"கன்னி" என்ற சொல்லிற்கு பெண் சார்ந்த அர்த்தம் வழங்குகையில் பூப்படைந்து, திருமணமாகாத, கன்னித் தன்மையிழக்காத பெண் என அகராதி அர்த்தம் பகிர்கின்றது.[2] கன்னிகளினை வழிபடுதலும், இலக்கியங்களில் கொண்டாடுதலும் உலகில் பரவலாகக் காணப்பட்டுள்ளது.

1 "சிறுதெய்வ வகைப்பாடு".

2 விக்சனரி, "கன்னி".

கிரேக்கத்தில் அதீனா (Athena), ஹெஸ்ரியா (Hestia), கீழைத்தேய இந்து மதத்தில் சப்த கன்னியர் வழிபாடு என வெவ்வேறு பண்பாடுகளில் கன்னித் தெய்வ வழிபாடு பயில்வில் காணப்பட்டன. இவ்வகையிலே கத்தோலிக்கக் கிறிஸ்தவம் மற்றும் கீழைத் திருச்சபைகளின் நாயகியான மரியாள் கன்னித்தன்மையுடைய தாய்த் தெய்வமாகப் போற்றப்படுகின்றார். இவர் கன்னிமை இழக்காது இறைவாக்குப்படி இறைவனின் மகனாகிய இயேசு கிறிஸ்துவினைக் கருவிலே சுமந்து மனிதநிலை வழங்கிய பெண் என்பதால் 'இயேசுவின் தாய்', 'இறைவனின் தாய்', 'இறைமக்களின் தாய்' ஆகப் போற்றப்பட்டு வழிபடப்படுகின்றார்.

முத்திரித்துவக் கோட்பாட்டை வலியுறுத்துவதும், ஒரு கடவுள் கொள்கையுடையதுமான கிறிஸ்தவம் காலனியத்தின் வழி கீழைத்தேய நாடுகளில் பரவலடையும்போது கத்தோலிக்கக் கிறிஸ்தவத்தில் மரியாள் வழிபாடே கிறிஸ்துவின் வழிபாட்டினை விட அதிக வரவேற்பைப் பெற்றது. அன்னையை ஆலயத்தின் அடிப்படைத் தத்துவமாகக் கொள்ளுதல், ஆலயத்தின் கருவறை அல்லது மூலஸ்தானத்தில் இறைவனின் பிரசன்னத்தின் ஆழத்தினை உணர்தல், 'அம்மன்' என்ற பெயரில் பெண்மை, தாய்மையை இறைவியாக்கி வழிபடுதல் மற்றம் பெண்களின் தியாகத்தினை மதித்து வழிபடு பெறுமானத்தை அழித்தல் ஆகியன ஏற்கனவே தமிழ், இந்து சமய மரபில் காணப்பட்டன. இவ்வாறான சூழலில் கிறிஸ்தவம் நுழையும் போது கிறிஸ்தவத்தில் காணப்பட்ட மரியாள் வழிபாடும், சொரூப வழிபாடும் முதன்மையாகியது. முதல் வணக்கத்துக்குரியவர்களான மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரில் தாய்மையை முதன்மையாகப் போற்றும் தமிழ்ப் பண்பாட்டுடன் அன்னை மரியாளின் வணக்கம் ஒன்றிப்போவதன் வழியாக கீழைத்தேயக் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களிடையே மரியாள் வழிபாடு என்பது 'மாதா' வழிபாடாக வரவேற்பைப் பெற்றது. இதற்கான எடுத்துக்காட்டே நம் நாட்டிலுள்ள கத்தோலிக்கத் திருச்சபையின் அதிகமான தேவாலயங்கள் மரியாளிற்கானவை - அவை 'மாதா கோயில்கள்' என்றே பொதுவாக அழைக்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி அன்னை மரியாளின் சொரூபமோ, திருவுருவப் படமோ இல்லாத கத்தோலிக்கத் தேவாலயங்களினைக் காண்பதும் அரிது.

**மரியாள் என்பவள் யார்?**

பண்டைய நாகரிகங்களிலே இனானா, இஷ்டார் தேவி, எனும் தொடர்ச்சியில் தெய்வமைந்தன் ஹோரஸை மடியில் ஏந்திய எகிப்தின் ஐஸிஸ் யேசுவைக் கையிலேந்திய மரியாள் சித்தரிப்பின் மூலவேர்[3] என்றும்; மெடோனாவை ஆராய்ச்சி செய்தவர்கள் தென்னமரிக்கத் தாய்த் தெய்வமே மரியாளாக்கப்பட்டார்[4]என்றும்; இன்னொரு சாரார் பெகனியத் தாய்த் தெய்வமே மரியாளாகத் தகவமைக்கப்பட்டார்[5] என்றும்; ஒருகாலத்திலே ஐரோப்பா எங்கும் காணப்பட்ட தாய்த் தெய்வங்கள் அதிகாரத்தினால் மரியாள்களாக மாற்றப்பட்டனர்[6] என்றும் வெவ்வேறு கருத்துக்களினை மரியாள் விக்கிரகநிலைப்படுத்தல் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் முன்வைத்துள்ளனர். இவற்றினுடாக மரியாள் விக்கிரகவியலின் மூலம் பற்றிய முடிவின்மையும், மரியாள் வழிபாட்டை ஏற்கும் பண்பாடுகளின் தாய்த் தெய்வ விக்கிரகவியலுடன் இணைந்து உருவான வடிவமாகவும் நோக்கப்படுவதினைக் காணமுடிகிறது.

3 "ISIS IS A VIRGIN MOTHER!!!"
4 "Catholic Church Merging 'Virgin' Mary with Mother Earth Goddess, Pachamama".
5 "Divine Mothers: The Influence of Isis on the Virgin Mary in Egyptian Lactans-Iconography".
6 Brittanica, "Mother Goddess".

மரியாள் (Mary) என்ற சொற் பிறப்பு பற்றி நோக்கின், இலத்தீன் வார்த்தையான '*Μαρία*' (Maria)என்பதிலிருந்தும் கிரேக்க வார்த்தையான *Μαριάμ* (Mariam) என்பதிலிருந்தும் பழைய ஆங்கிலப் பதமாகிய 'Marie' எனும் சொல் உருவாகியது. அதனிலிருந்து இன்றைய ஆங்கிலப் பதமாகிய 'Mary' மேரி எனும் வார்த்தை முகிழ்ந்தது. இவ்வார்த்தைகக்குப் பல அர்த்தங்கள் காணப்படுகின்றது. தலைவி, அன்புமிக்கவள், கடலின் நட்சத்திரம் ஆகிய மூன்று பெயர்களும் மிகுதியாக வழங்கப்பட்டாலும் சுட்டிப்பான அர்த்தம் என்ன என்பது பற்றித் தெளிவில்லை.[7] மரியாளினை அரபிக்:மரியம், அரபு:மர்யம் எனும் சொற்களினாலும் சுட்டப்பட்டுள்ளதோடு இவர் இஸ்லாத்தின் குர்ஆனில் இப்பெயர்களால் குறிப்பிடப்படுகின்றார். கிறிஸ்தவத்தின் பழைய ஏற்பாட்டின் படி மரியாள் 'புனித மேரி' அல்லது 'கன்னி மரியாள்' என அறியப்படுகின்ற ஓர் நஸரேத்து யூதப் பெண்மணி ஆகும். புதிய ஏற்பாட்டில் இவர் இயேசு கிறிஸ்துவின் தாய் ஆகக் குறிப்பிடப்படுகிறார். மத்தேயு மற்றும் லூக்கா நற்செய்திகள் மரியாளைக் கன்னி (*παρθένος, parthénos*) எனக் குறிப்பிடுகின்றன. அதேபோன்று இஸ்லாத்தின் குர்ஆனில் மர்யம் என்பவர் கடவுளின் கட்டளைப்படி அற்புதமான குழந்தையைச் சுமந்தவள் என நம்பப்படுகின்றது. இவ்வகையே மர்யம், மரியாள் இரண்டும் ஒரே நபரினைச் சுட்டுகின்றதெனில் இருமதமும் ஒன்றுடனொன்று தொடர்புறுகின்றதனைக் காணலாம். பொதுவாகக் கிறிஸ்தவ மரபுப்படி மரியாள் என்பவர் இயேசுவைத் தூய ஆவியினால் தன் கன்னித்தன்மை கெடாமல் கருத்தாங்கியவர் என்பது எல்லாக் கிறிஸ்தவ பிரிவு நம்பிக்கைகளிலும் ஏற்கப்படுகின்றன.

மரியாள் கிறிஸ்தவத்திலே ஆரம்பத்திலிருந்தே மதிக்கப்படும் பெண்ணும், முக்கிய புனிதர்களில் ஒருவரும் ஆகும்.[8] இவர் கத்தோலிக்கக் கிறிஸ்தவர், கீழைத்தேய மரபுவழித் திருச்சபை, அங்கிலிக்கன் சமூகம், லூத்தேரியர் தேவாலயத்தினர் ஆகிய கிறிஸ்தவப் பிரிவுகளால் 'கடவுளின் தாய்' எனும் வகையில் வணக்கத்துக்கு உரியவராய் மதிக்கப்படுகிறார். ஆனால் புரட்டாஸ்தாந்து கிறிஸ்தவத்தில் மரியாள் என்பவர் சிறிய பங்கிற்குரியவரே. கத்தோலிக்க கிறிஸ்தவப் பிரிவில் மரியாள் என்பவர் அருள் மிகப்பெற்றவர்,[9] ஆசீர்வதிக்கப் பெற்றவர்,[10] தூய ஆவியின் நிறைவைப் பெற்றவர்,[11] கன்னித் தன்மை உடையவர்,[12] விண்ணக மாட்சி பொருந்தியவர்[13] எனப் பலவாறாகச் சிறப்பிக்கப்படுகின்றார். கத்தோலிக்கத்தில் மரியாள் எனும் பதத்திற்கு மேலதிகமாக இவரினை 'தியோட்டகஸ்' (Theotokos) என்றும் சுட்டப்பட்டுள்ளது. இப்பதம் கடவுளினைத் தாங்கியவர் ('Bearer of God') எனப் பொருள்படும். கத்தோலிக்கத் திருச்சபையில் மரியாளுக்கு செலுத்தப்படும் வழிபாடானது கத்தோலிக்க மரபு, மறையுண்மைகள் மற்றும் விவிலிய

7 "Mary: Meaning & History": சேவியர், *மரியன்னையின் வாழ்க்கை வரலாறு.*

8 "இறை வார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுபவர்களே என் தாயும் என் சகோதரர்களும் ஆவார்கள்" (லூக்கா 8:21) எனத் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9 மரியன்னையின் வாழ்விலே, அவரை வானதூதர் கபிரியேல் "அருள் மிகப்பெற்றவரே வாழ்க, ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்." (லூக்கா 1:28) என்று வாழ்த்துரைத்தார்." எனத் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10 "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்" (லூக்கா 1:42) இவ்வாறு எலிசபெத்தும் புகழ்ந்தார் எனத் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11 தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மீது நிழலிடும்" (லூக்கா 1:35) என்ற வார்த்தைகளால் மரியாள் தூய ஆவியின் நிறைவைப் பெற்றவர் என்பது தெளிவாகிறது.

12 "புனித மரியே!மாசில்லாக் கன்னிகையே!" நவநாள் செபம் Encyclical " ENCYCLICAL OF POPE PIUS XII ON PROCLAIMING THE QUEENSHIP OF MARY TO THE VENERABLE BRETHREN, THE PATRIARCHS, PRIMATES, ARCHBISHOPS, BISHIOPS, AND OTHER LOCAL ORDINARIES IN PEACE AND COMMUNION WITH THE HOLY SEE

13 "மரியாவின் வாழ்வு"

அடிப்படையிலானது ஆகும். இங்கு கன்னி மரியாள் திருச்சபையின் முன்மாதிரியாகவும், சபையின் பாதுகாவலியாகவும், வத்திக்கான் 6ஆம் சின்னப்பரின் அறிவிப்பிற்கேற்ப திருச்சபையின் தாயுமாகவும் அறிவிக்கப்பட்டதோடு திருச்சபையும் மரியாள் போன்று ஓர் கன்னியாகவே பார்க்கப்பட்டது.

## கத்தோலிக்கமும் மத வழிபாடும்

'கத்தோலிக்கம்' எனும் சொல் 'katholikos' (καθολικός) எனும் கிரேக்க மூலத்தினின்றும், catholicus எனும் இலத்தீன் மூலத்தினின்றும் பிறந்ததே. இது கிறிஸ்தவ திருச்சபைகளில் இறையியல், கோட்பாடு, திருவழிபாடு, அறநெறிக் கொள்கை மற்றும் ஆன்மீகம் சார்ந்து தொழிற்படும் குறிப்பிட்ட வகையிலான கிறிஸ்தவர்களினையும், கிறிஸ்தவ சபைகளினையும் விவரிக்கிறது.[14] அவ்வகையே உலகில் பரந்து விரிந்து காணப்படும் திருச்சபையாகிய இது இயேசு கிறிஸ்துவால் தோற்றுவிக்கப்பட்டதும் உரோமை மையமாகக் கொண்ட திருச்சபையும் ஆகும். அதனால் 'உரோமன் கத்தோலிக்கத் திருச்சபை' எனவும் அழைக்கப்பட்டது. அத்தோடு இது கிழக்கு மரபு வழித் திருச்சபைகள், அங்கிலிக்கன், லூதரனிய சபைகளின் இணைவாகவும் காணப்படுகின்றது.

கிறிஸ்து என்ற மனித உருவெடுத்த கடவுள் பன்னிரு அப்போஸ்தலர்களினையும், எழுபத்திரண்டு சீடர்களினையும் தன் பணியின் தொடர்ச்சியாக நியமித்து "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மத்:25: 19: 20)[15] என்று கூறியதற்கேற்ப கிறிஸ்துவின் இறப்பின் பின்னர் அப்போஸ்தலர் இராயப்பர் தலைமையூடாகத் திருச்சபை பல்வேறு நாடுகளிற்கும் பரவலடைந்தது. இவ்வகையே இயேசுவால் தெரிவுசெய்யப்பட்ட அப்போஸ்தலர்களுள் சீபோன் யூத்தேயு இந்தியாவை அண்டிய மொசப்பதேமியப் பகுதிகளிலும், தோமையார் இந்தியாவிலும் நற்செய்தியைப் போதித்தார் என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.[16] இத்தோடு தொமஸ்பார்வம் என்ற நூலின் முதற் செய்யுளின் பன்னிரண்டாம் வரியில் இந்தியாவிற்கு வந்த தோமையார் இலங்கைக்கும், மலாக்காக்கும் சென்றார் என்றும், புனித நிசே போறஸ் "தோமா இலங்கையிலும் நற்செய்தி போதித்தார்" என்றும் வலியுறுத்துகின்றார்.[17] எனினும் தோமா இலங்கைக்கு வராதிருந்தாலும் இந்தியாவில் மேற்கொண்ட நற்செய்திப் பணியின் எதிரொலி இலங்கையிலும் குறிப்பாக மன்னார், யாழ்ப்பாணத்தில் கேட்கப்பட்டிருக்கும். இலங்கையில் கிறிஸ்தவம் தமிழ்நாட்டிற்குச் சமமாகத் தன்னை ஸ்தாபித்தாலும் வணிகம், சமயம், அரசியல் சம்பந்தப்பட்டே தம் அதிகாரத்தினை ஆரம்பத்தில் ஸ்தாபித்தனர்.

தென் இந்தியாவில் நிகழும் பண்பாடு, சமூக, சமய மாற்றங்கள் காலத்திற்கு காலம் யாழ்ப்பாணத்தினையும் பாதித்தது குறிப்பிடத்தக்கதே அதற்குக் காரணம் மொழி ஒருமைப்பாடும், பண்பாட்டு ஒற்றுமையும், புவியியல் அண்மைத்தன்மையுமே ஆகும். எவ்வகையாக பௌத்த, சைவ, வைணவ மதங்கள் இலங்கையை வந்தடைந்தனவோ அவ்வாறே கிறிஸ்தவமும் அங்கிருந்து பரவியது. கிறிஸ்தவம் உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணத்தில் இருப்புச் செய்ய முன்னரே கிறிஸ்தவப் பண்பாட்டை யாழ்ப்பாணத்தினர் அறிந்திருக்க வாய்ப்புண்டு. கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்னரே மேலைத்தேய வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்றுள்ளனர். குறிப்பாக கந்தரோடை, காரைநகர், ஆனைக்கோட்டை, நவாலி போன்ற இடங்களைச் சேர்ந்த

14 Brittanica, "Catholic".

15 *திருவிவிலியம்.*

16 ஜெயசீலன், *ஆசியத் திருச்சபை வரலாறு*, 27.

17 ஜெயசீலன், *யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு*, 6,7.

வணிகர்களுடன் இவ்வர்த்தகர்கள் தொடர்புபட்டிருக்கலாம். இதனால் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னரே கிறிஸ்தவத்தினை அறிந்திருக்க வாய்ப்புண்டு.[18] இதன் நீட்சியாகவே யாழ்ப்பாணத்தையும் மன்னாரையும் புனித தோமையருடன் தொடர்புபடுத்தும் இலக்கியக் குறிப்புகள் காணப்படுகின்றன.[19] அத்தோடு இங்கு காணப்பட்ட துறைமுகப் பண்பாடும் போர்த்துக்கேயர் வருகையின் முன்னரே கிறிஸ்தவத்தினை யாழ்ப்பாணத்தவர் அறிந்திருக்க வாய்ப்புள்ளதாகக் கருதினாலும் போர்த்துக்கேய வருகையே உத்தியோக பூர்வமாக கிறிஸ்தவ மதத்தினை இங்கு அறிமுகப்படுத்தியது.

16ஆம் நூற்றாண்டில் 1560ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தினைப் போர்த்துக்கேயர் கைப்பற்றுதலின் வழி கத்தோலிக்கம் இங்கு இருப்புக்கு வந்தது. பாதிரிமார்களின் பிரயாசத்தாலும், கத்தோலிக்கம் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டோர், வலிமையற்றோரினை முன்னிலைப்படுத்தி அவர்களினை விண்ணுலகுக்கு நெருக்கமாக இருப்பதாக ஆற்றுப்படுத்தும் எண்ணக்கருவினை கைக்கொண்டதாலும் கத்தோலிக்கம் புரட்டாஸ்தாந்து போன்று இறுக்கத்தினைப் பேணாமையும் புரட்டாஸ்தாந்தினால் வெல்ல முடியாதளவு யாழ்ப்பாணத்தவரின் மனங்களினை இலகுவாகக் கத்தோலிக்க மதம் வெற்றி கொண்டது. அத்தோடு இந்துக்களிற்குப் பழக்கப்பட்ட உருவ வழிபாட்டினை இவர்களும் கைக்கொள்ளுதலின் வழியும், ஒரு கடவுள் நம்பிக்கை பற்றி பேசுதல், இறையரசு அல்லது பாவவிமோசனம் பற்றி வலியுறுத்தல் ஆகியவற்றின் வழியும் இவர்கள் தம் மதத்தினை வலுவூட்டிக் கொண்டனர். கத்தோலிக்கம் பல்வேறு இடங்களிலும் பல்வேறு பண்பாடுகளிலும் பரவலடைந்தாலும் "அவரவர் பண்பாட்டை, கலாசாரத்தை இழக்காமல் கிறிஸ்தவனாகலாம்" எனும் முதலாம் ஜெருசலேம் சங்கத்தின் தீர்மானம் கத்தோலிக்கத்தை மேலும் மக்களிடையே வேரூன்றவும் தம்மைப் பெருவாரியாக எதிர்ப்பின்றி ஸ்தாபித்துக் கொள்ளலுக்கும் காரணமாயின.[20]

"திருச்சபை எந்தவொரு நாட்டினருக்கும், இனத்தவரிற்கும், பண்பாட்டிற்கும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது அனைத்து நாட்டிற்கும், அனைத்துப் பண்பாட்டிற்கும், அனைத்து மொழியினருக்கும், அனைத்துக் காலத்திற்கும் உரியது"[21] என்ற நிலை சங்க ஏடுகளில் சுட்டப்படுகின்றது. இவ்வகையே கத்தோலிக்க மதக் கொள்கையில் பிற கிறிஸ்தவ சபைகளின் கொள்கைகளும், பண்புகளும் உள்ளதனை மறுப்பதற்கில்லை. இத்தோடு காலனித்துவத்தின் வழியாக பல்வேறுபட்ட இடங்களிற்கு பரவலடைந்த திருச்சபையில் புற இனத்தவர்களும் இணைந்து கொண்டமையினால் குழப்பநிலைகள் தோன்றின. இதற்குத் தீர்வுகாணும் முகமாக இராயப்பரால் கூட்டப்பட்ட சங்கத்தில் யூதர்களால் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்ட சடங்குகள், சட்டங்கள் கைவிடப்பட்டு கிறிஸ்தவம் அனைத்துலக மதமாக ஏற்கப்பட்ட நிலையில் குறித்த சமூக, பண்பாட்டிற்கேற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் பண்பினையும் உள்வாங்கிக் கொண்டது.

## கிறிஸ்தவமும் மரியாள் எனும் பெண் வழிபாடும்

கிறிஸ்தவ மரபிலே வணக்கம், ஆராதனை இரண்டிற்கும் முக்கிய இடமுண்டு. இறைவனுக்கு செலுத்துவது ஆராதனை (Adoration), புனிதருக்குச் செலுத்துவது வணக்கம் (Dulia), மரியாளுக்குச் செலுத்துவது மேலான வணக்கம் (Hyper dulia) என வகைப்படுத்தப்படுகின்றது.

18 யேசுதாசன், *கிறிஸ்தவ வாழ்வு:*
19 ஜெயசீலன், *யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு*, 4:
20 சேவியர் வில்பிரட் "யாழ்ப்பாண கத்தோலிக்க தேவாலயச் சிற்பங்கள் ஒரு வரலாற்றுப் பார்வை".
21 யேசுதாசன், *கிறிஸ்தவ வாழ்வு.*

உரோமன் கத்தோலிக்க நிசேயா சங்கம், கொன்ஸ்தாந்தினோபிள் சங்கம், கல்சிதோனியச் சங்கம், 3ஆம் கொன்ஸ்தாந்தினோபிள் சங்கம் போன்றனவை மரியாள் வழிபாடு பற்றி நேரடியாகச் சொல்லாது இறைவனின் தாய் என குறிப்பிட்டன. எபேசு சங்கம் இறைவனைத் தாங்குபவர் தியோட்டகஸ் எனக் குறிப்பிடுவதன் வழி இறைவனின் தாய் போற்றப்படத்தக்கவள் என முன்வைத்தது. 2ஆம் நிசேயா சங்கத்தில் புனித உருவங்களுக்கும், திருப்பண்டங்களுக்கும் வணக்கம் செலுத்துவது சரியா? தவறா? எனும் வாதத்தில் வணக்கம் தவறானதல்ல எனும் முடிவிற்கேற்ப 2ஆம் நிசேயா சங்கம் புனிதர்களின் திருவுருவங்களினை வணங்குவது தவறில்லை என்பதனை மேலும் வலுவூட்டியதோடு மரியாள் வணக்கத்தைத் தொடர்ந்து உரமூட்டியது. இறுதியாக 2ஆம் வத்திக்கான சங்கம் தான் மிக முக்கிய பங்களிப்பினை மரியாள் வழிபாட்டுக்கு வழங்கியது அதாவது தான் வெளியிட்ட 16கொள்கைத் திரட்டுகளில் ஒன்றான 'திருச்சபை' எனும் கொள்கைத் திரட்டின் 8ஆம் அதிகாரம் முழுவதனையும் கன்னி மரியாளுக்கு ஒப்புக் கொடுத்ததோடு கிறிஸ்து மற்றும் திருச்சபையின் மறைபொருளில் மரியாளுக்கான இடம் மற்றும் முக்கியத்துவம் பற்றி மிகத் தெளிவான இறையியல் கோட்பாடுகள், விளக்கங்களினைத் தருகின்றது. இதில் மரியாள் இயேசு கிறிஸ்துவின் மீட்பின் மிகச் சிறந்த கனி மற்றும் கடவுளினதும், திருச்சபையினதும் தாயாகவும், உருவமாகவும், மிகச்சிறந்த உறுப்பினராகவும், முன்மாதிரியாகவும், நிறைவுக்கால அடையாளமாகவும் விளங்குவதனை எடுத்துரைப்பதோடு மரியாள் வணக்கத்தின் இடம், அவசியம், தேவை மற்றும் முக்கியத்துவம் பற்றியும் தெளிவாகக் கூறப்படுகின்றது.[22] இவ்வாறு மரியாள் வணக்கம்(பக்தி) உருவெடுக்கவும், வளர்ச்சியடையவும், திருவழிபாட்டில் இடம் பெறவும் மேற் சொன்ன சங்கங்களும், மக்களின் நம்பிக்கைளும், போதனை, வழிகாட்டல்களும் உதவின.

கிறிஸ்தவ மதத்துக்கும் யூத மதத்திற்கும் ஒரு சில பகிரப்பட்ட பண்புகள் காணப்படினும் இரண்டுக்குமிடையே பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவ்வகையே பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனும் இரு புனித நூல்களிடையே வேறுபாடுகளினைக் காணலாம். யூத மதத்திலிருந்து கிறிஸ்தவம் ஊற்றெடுத்திருப்பினும் ஊற்றெடுத்த இடத்திலே நின்று உறைந்து போகாது தனது ஓட்டங்களினையும், பாய்ச்சல்களினையும் விசாலப்படுத்திக் கொண்டது. யூத மதத்தில் கடவுள் வார்த்தையென்பதே நியாயப் பிரமாணமாகக் கணிக்கப்பட்டது ஆனால் கிறிஸ்தவத்திலே தேவவார்த்தை இயேசு நாதராக மானிட உருவெடுத்தது. பழைய ஏற்பாட்டில் புனிதம் என்பது இறைவனுக்கு மட்டுமே உரியது அவ்வகையே இறைவனை மட்டும் வழிபாடியற்றல் காணப்பட்டது. ஆனால், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவாகிய கடவுள், திருச்சபையின் புனிதர்கள் எல்லோருக்கும் புனிதத்தன்மையினை அளித்தனர். இவ்வகையே கிறிஸ்துவின் சாயலினைத் தாங்கிப் புனித வாழ்வு வாழ்ந்து விசுவாசத்திற்காக இரத்தம் சிந்திய புனிதர்கள் வணக்கம் வளரலாயிற்று. முதலாம் நூற்றாண்டளவில் புனிதர்களின் அடக்கத் தலங்களிடையே புனித வணக்கம் கொண்டாடப்பட்டதானது 4ஆம் நூற்றாண்டளவில் உலகம் முழுவதும் கொண்டாடப்படலாயிற்று. புனிதர்களில் தலை சிறந்த புனிதையான மரியன்னை கிறிஸ்துவின் தாயாக நினைவுகூரப்பட்டதோடு திருச்சபையின் தாயாகவும் பெண்களுக்குள் பெண்ணாகவும் மதிக்கப்பட்டு வணக்கநிலைக்கு உட்படுத்தப்பட்டார்.

மரியாள் வணக்கம் மற்றும் மரியாள் பக்தியின் பிறப்பிடம் கீழைத்திருச்சபையே. உலகிலேயே முதன்முதலில் கீழைத் திருச்சபைகளான எகிப்து, எருசலேம் போன்ற இடங்களில் 3ஆம் நூற்றாண்டிலே தோன்றிய மரியாள் வணக்க முறையே மேலைத் திருச்சபைக்கு

22 *திருவிவிலியம்*, 66 - 67.

மத்திய காலத்தில் பரவியது எனப்படுகின்றது. மேலை நாடுகளில், அனைத்தையும் மரியாள் வழியாகப் பெற்றுக் கொள்வதே இறைவிருப்பம் என்றும் கருதப்பட்டது. அவ்வகையே பாவிகளின் அடைக்கலமாகவும், இறைவனிடம் பரிந்து பேசுபவராகவும், இரக்கத்தின் அன்னையாகவும் மரியாள் கருதப்பட்டார். தலையாகிய கிறிஸ்துவோடு, உடலாகிய திருச்சபையினை இணைக்கும் கழுத்தாக மரியாள் காணப்பட்டார். மரியாள் வணக்கம் பற்றி ஆறாம் பவுல் கூறுகையில் "தம் திட்டத்திற்கேற்ப அனைத்தையும் நிறைவேற்றும் இறைவனின் ஆழம் காண முடியாத அவருடைய சொந்த விருப்பத்தில் தன் உறுதியான அடித்தளத்தைக் கொண்டுள்ளது"[23] என்கிறார்.

கிறிஸ்தவ மரபில் மரியாள் பெறும் இடமானது பெண்களையும், அவர்களது நிலையையும் பொறுத்தமட்டில் ஒரு தனி முக்கியத்துவத்தை அடையாளப்படுத்தினும், மரியாள் கிறிஸ்தவத்தில் முழுமுதற் கடவுளல்ல. முத்திரித்துவத்திலும் அவருக்கு இடமில்லை. அத்தோடு அவள் ஆண் தெய்வத்தால் ஆண் மகவைச் சுமக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவளும், ஏவாளின் பாவத்தைத் துடைக்க பணிவையும் கீழ்ப்படிதலையும் முன்வைத்து பாவ மன்னிப்புக்காக ஆண் தெய்வத்தின் முன் மண்டியிடும் மானுடத்தாய், கீழ்ப்படிதலின் சின்னமாகவே சித்தரிக்கப்பட்டுள்ளார். இதனைப் பெண்ணிய நிலையில் நோக்கும் போது மதத்தில் காணப்பட்ட ஆணாதிக்க நிலையின் வெளிப்பாடாகவே தோன்றினும், "ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை நீங்கள் அனைவரும் கிறிஸ்து இயேசுவுக்கு ஒன்றாயிருக்கிறீர்கள்" எனும் திருவிவிலிய வார்த்தை பெண்ணையும் ஆணையும் ஒரே நிலையில் பார்க்க முயற்சிப்பதையும் காணலாம்.

### யாழ்ப்பாணத்தில் மரியாள் வழிபாடு

"கிறிஸ்தவக் கலையும், பண்பாடும் உலகத்திலே ஓர் புதிய ஆத்மம், புதிய கருத்துநிலை, முழுமையான ஓர் புதிய வகைமையிலான விழுமியங்களை அறிமுகப்படுத்தியது. இந்த மாற்றமும் வளர்ச்சியும் அவை இருப்பு செய்யும் நாகரிகங்கள், பண்பாட்டுப் போக்குகள், பண்புகள் ஆகியவற்றின் இடம், காலம் சார்ந்தும், புவியியல் ரீதியான போக்குகளோடும் தொடர்புற்றன." என H.P. Gerhard கூறுவது போன்று நாடுகாண் பயணம் மற்றும் காலனித்துவத்தின் ஊடாகப் பரவுதலடையும் கத்தோலிக்க மதமானது யாழ்ப்பாணத்தில் பரப்பப்படும்போது ஏற்கனவே இருப்புச் செய்திருந்த இந்து மதத்திலிருந்து புதுப்பண்பாடாக இருப்பதற்கேற்ப எதிர்ப்பைச் சந்தித்த போதும் பின்னர் யாழ்ப்பாணப் பண்பாட்டு நிலவுருவிற்கு ஏற்றவாறு மதப்பயில்வில் ஏற்பட்ட நெகிழ்ச்சி கத்தோலிக்கத்தை அதிகமானோர் தழுவக் காரணமாகியது.

யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்றியதும் ஆரம்பத்தில் அவர்களால் கட்டப்பட்ட தேவாலயங்களில் கப்பல்களில் காணப்பட்ட அல்லது அவர்களின் வணக்கத்துக்காகக் கொண்டுவரப்பட்ட சொரூபங்களையே முதற் காலத்தில் ஸ்தாபித்துள்ளனர். அவை அதிகம் மரியாள் சொரூபங்களாகவே காணப்பட்டன. அத்தோடு யாழ்ப்பாணத்தில் செதுக்கப்பட்ட முதற் சொரூபமும் மாதாக்குரியதே. 1621 இல் போர்த்துக்கேயர் கோட்டையை ஒட்டிய யாழ்நகரைத் தலைபட்டிணமாகத் தெரிவு செய்தபோது யாழ்ப்பாணத்தின் பரிபாலினியாகிய புதுமை மாதாவிற்கே யாழ்ப்பாண இராச்சியத்தினையும் ஒப்புக் கொடுத்தனர். இவ்வகையாகக் கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் மரியாளிற்கான முதன்மையும் மரியாள் வணக்கமும் யாழ்ப்பாணத்தில் மேலாதிக்கம் பெற்றிருந்ததனைக் காண முடிகின்றது.

23 Marialis Cultus " FOR THE RIGHT ORDERING AND DEVELOPMENT OF DEVOTION TO THE BLESSED VIRGIN MARY".

இந்து மதத்தினர் தாம் பல்வேறு பெயர்களில் வழிபடும் அம்மன் வழிபாட்டிற்குச் சமமானதும் அருகிருப்பதுமாக கிறிஸ்தவத்தில் மரியாள் எனும் பெண் தெய்வத்தினை நம்பினர். அம்மன் எவ்வாறு 'தாய்' என்ற நிலையில் வணங்கப்பட்டாரோ, மற்றைய இந்துத் தெய்வங்களை விடப் பல பெயர்களில் பிராந்திய வேறுபாடுகளுடன் விக்கிரகநிலைப்படுத்தப்பட்டு வழிபடப்படுபவராய் முக்கியத்துவப்படுத்தப்பட்டாரோ அவ்வாறே மரியாளும் பல விக்கிரகவியல்களினையும், பல பெயர்களினையும் குறித்த பண்பாட்டிற்கேற்ப மாற்றிக்கொண்டு கத்தோலிக்க மத வழிபாட்டில் முக்கிய இடத்தைப் பெற்றார். சிலுவைப் போரின் தொடர்ச்சியாகப் போர்த்துக்கேய, பிரித்தானிய காலனித்துவவாதிகள் மரியாள் வழிபாட்டை முன்னிலைக்குக் கொண்டு வந்தாலும், பெண் தெய்வ வழிபாடு சார்ந்த விருப்புநிலையும் யாழ்ப்பாணத்தில் மரியாள் வழிபாட்டை முதன்மையாக்கியதற்கான காரணம் எனலாம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, 'மரியாள்' என அழைப்பதை விட 'மாதா' 'அன்னை' எனும் பதங்களினையே அதிகம் பயன்படுத்துவதனைக் காணமுடிவதோடு, அவருக்குரிய தேவாலயங்களும் 'மாதா கோவில்கள்' என்றே அழைக்கப்படுகின்றன. மாதா எனும் சொல் மரியாள் என்பதை விட உறவு, உணர்வு ரீதியாக மிக நெருக்கமான ஒருவராக மக்களுடன் பிணைப்பை ஏற்படுத்துகின்றது. மாதா என்ற சொல் மரியாளை மட்டுமன்றி இந்துப் பெண் தெய்வங்களினையும் விழிக்கப் பயன்பட்ட பொதுச்சொல்லாகவும் இருந்திருக்க வேண்டும். ஏனெனில், மாதா எனும் சொல் இந்து மதத்தில் கண்ணகியினையும் சுட்டப் பயன்பட்டதாக ஒரு கருத்துண்டு.[24] அதுமட்டுமன்றி, யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட முன்னர் அதிகமான கண்ணகி ஆலயங்கள் கரையோரங்களில் கடலை அல்லது கடனீரேரியை நோக்கிக் காணப்பட்டதாகவும், காவேரிப் பட்டினத்தின் ஓர் செல்வந்த வணிகனின் மகளாக கண்ணகி காணப்பட்டமையால் கடல் வாணிபத்தில் ஈடுபட்டவர்களாலும் மீனவர்களாலும் விரும்பப்பட்டு வழிபடும் ஓர் காவல் தெய்வமாக கண்ணகி காணப்பட்டுள்ளார். போர்த்துக்கேயர் காலத்தில் கரையோரங்களில் வாழ்ந்த மக்கள் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டபோது அங்கு காணப்பட்ட சில கண்ணகி கோயில்கள் மாதா கோவில்களாக மாற்றமடைந்தன எனப் பேராசிரியர் பொ. ரகுபதி குறிப்பிடுகிறார்.[25] இதற்கு வலுச் சேர்ப்பதாக மன்னார் மடுமாதா ஆலயம் அமைந்துள்ள இடம் போர்த்துக்கேயர் காலத்திற்கு முன்னர் ஓர் கண்ணகி கோயில் காணப்பட்ட இடம்[26] என அறியமுடிகின்றது. இவ்வகையே பெண் தெய்வமாகிய கண்ணகி வழிபாட்டுக்கு ஏற்கனவே பழக்கமானவர்களாக இருந்த கரையோரத்தவர் மதம் மாறிய பின்னர் மரியாளினையும் இன்னோர் பெண் தெய்வம் எனும் நிலையில் ஏற்றுக் கொண்டிருக்கவேண்டும். கண்ணகியை அம்மா! அம்மன்! தாயே! என விழித்தது போல் மரியாளை மரியாள் அல்லது மேரி என்பதற்கு பதிலாக மாதா! என்று அழைத்திருக்கவேண்டும். இதுவோர் வகையில் போர்த்துக்கேயர் கால உள்ளூரவரின் பண்பாட்டு மாற்றத்தின் இருமைநிலையின் வெளிப்பாடாகவும் நோக்கலாம்.

24 யாழ்ப்பாணத்தில் மாதகலுக்கு அருகிலுள்ள ஜம்புகோளப்பட்டினத்திலே கஜபாகு மன்னன் சேரன் செங்குட்டுவனிடமிருந்து பெற்று வந்த காற்சிலம்பையும், கண்ணகி சிலையையும் கொண்டு வந்திறங்கி அங்கணாங்கடவையில் முதலாவது கண்ணகி ஆலயத்தை அமைத்ததாக நம்பப்படுகின்றது. அவ்வரலாற்றுடன் தொடர்புறும் மாதகல் எனும் ஊரின் பெயரே மாதா என அழைக்கப்படும் கண்ணகியம்மனின் கல்லிலான விக்கிரகம் வந்திறங்கியபடியால் வந்ததென ஒரு கதையுண்டு: குலேந்திரன், "இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு".

25 Ragupathy, *Early settlement in Jaffna: An archeological survey*, 217.

26 Waduge, " Our Lady of Madhu Church is built on an ancient Pattini Amma Temple site"

மேலும், கடற்றொழிலாளர்கள் தமது தொழிலுக்குச் செல்ல முன்னர் கரையோரத் தேவாலயங்களினை வழிபட்டுச் செல்வதும், கடற்கரையில் படகிலிருந்தே வழிபடுவதற்கு ஏற்றவாறு இறங்குதுறைகள், கரையோரத் தேவாலயங்களில் கடலை நோக்கி மாதா சொரூபங்கள் வைக்கப்பட்டுள்ளமையானது யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவம் பரவ முன்னர் கரையோரங்களில் காணப்பட்ட கண்ணகி கோயில்களினை வழிபட்டே தமது கடற் பயணங்களினையும், கடற் தொழிலையும் தொடரும் வழக்கத்தின் மாற்றமாகக் கருதலாம். இருப்பினும் கிறிஸ்தவத்திலும் கடல் பயணத்தின் போது மாதாவினை வழிபடுதல் என்பது வழக்கமாகவுள்ளது. கடலில் வரும் துன்பங்களைத் தீர்ப்பவராக, பாதுகாவலியாக. கடல் வளத்தை அள்ளிக் கொடுப்பவராக கப்பலாத்தி அல்லது கப்பலேந்தி மாதா எனும் வடிவம் இலங்கையின் வடக்கு கிழக்கு கரையோரத்தவரால் பரவலாக வழிபடப்படுவதோடு சிந்தாயாத்திரைமாதா பிரார்த்தனை, தூய சித்தாந்திரை மாதாவிற்கான தனி செபமாலை, சித்தாந்திரை மாதாவிற்கான மன்றாட்டு, செபம், போன்றனவும் காணப்படுகின்றன.

மாதா - அம்மன் வழிபாடு இடையே ஓர் குழப்பம் அக்கால மக்களிடம் காணப்பட்டமையாலே, ஞானப்பிரகாசர் “மாதாவோ? அம்மனோ?” எனும் உரையில் அம்மன் வேறு, மாதா வேறு எனத் தெளிவுறுத்துகின்றார்.“மாரியம்மன் என்பவள் அம்மை, கோதாரி நோய்களை உண்டாக்குபவள், அவளது கோபம் தணிய வேண்டுமானால் பலி வெட்டல், குளுத்தி போடல் வேண்டும். அதேபோன்று கண்ணகை என்ற அம்மன் கோவலனின் மனைவி, கோவத்தால் மதுரையையே எரித்தவள். ஆனால் மரியாள் அப்படியானவளல்ல மென்மையானவர், பொறுமையானவர், மன்னிக்கும் தன்மை கொண்டவர்” ஆகவே இருநிலை வடிவங்களினையும் ஒப்புநோக்க முடியாது என அவரது விளக்கமமைகின்றது.[27] இவ்வாறு ஒப்புநோக்கலும் மறுத்தலும் குணவியல்பு சார்ந்த நிலையிலே நோக்கப்பட்டுள்ளது. உள்ளார்ந்த ரீதியில் அம்மன் மரியாள் இருவரும் பெண் மற்றும் தாய்த்தெய்வம் எனும் நிலையில் தொடர்பில்லை என முற்று முழுதாக நிராகரித்துவிட முடியாது

இந்து சமயத்தினர் போன்றே கத்தோலிக்கர்களும் சிலை வழிபாட்டுக்காரர்கள். எந்த ஒரு பொருளோ, நபரோ வழிபடுநிலையினை அடையும் போதே உருவம், சிலை பற்றிய எண்ணமும் தோன்றுகிறது. இந்து மத மரபில் ‘சிற்பம்’ ‘விக்கிரகம்’ என்றே சிலைகள் அழைக்கப்படும். விக்கிரகம் எனில் வடமொழிச் சொல்லில் உருவம், சரீரம் எனப் பொருள்படுவதோடு இறைவனின் உறைவிடமாய்க் கருதப்படும் ஆனால் கத்தோலிக்கத்தில் விக்கிரக வழிபாடு எனும் பதத்தினை நிராகரிக்கின்றனர். கத்தோலிக்கத் தமிழ் மரபில் வணக்கத்துக்குரிய வடிவங்களின் பிரதிநிதித்துவத்தினை ‘சொரூபம்’ என்றே அழைக்கப்பட்டது. சொரூபம் எனும் தமிழ்ப் பதத்தினைக் கையாள்வதின் வழியாக கத்தோலிக்கம் தமிழ்ப் பண்பாட்டினை ஏற்றுக்கொள்வது போன்றிருப்பினும் மறைமுகமாக இந்து சமயத் தெய்வ வழிபாட்டை அது கேள்வி கேட்கின்றது.

### கிறிஸ்தவக் கலையில் மரியாள் வழிபாடும் மாதா சொரூபங்களும்.

கிறிஸ்தவ வழிபாடு மற்றும் அப்போஸ்தலர்கள் கால மாந்திரிக வாழ்க்கையினின்று ‘சொரூபம்’ என்பது பிரித்துப் பார்க்கமுடியாதது. இவை மனதினையும், ஆத்மத்தினையும் கடவுளின் இராச்சியத்தின், ஆத்மீகத்தின் பால் இட்டுச் செல்வன.[28] கத்தோலிக்கத் திருவழிபாட்டில் சொரூபங்கள், படங்களிற்கு தனியிடம் உண்டு. தமிழில் கத்தோலிக்க நூல்களை முதன் முதலில் எழுதியவரான றொபேட் டி நோபிலி (Robert De Nobili) என்பவர் குறிப்பிடுகையில் “பரலோகத்தில் வெறும் அரூபியான

27 ஞானப்பிரகாசர், *சுவாமி. மாதாவோ - அம்மனோ?,*
28 Monastery Icons, “The History &Symbolism of Icongraphy”.

வஸ்துக்களையும் பூலோகத்தில் வெறும் சுரூபியான வஸ்துக்களையும் உள்ளடக்கிய பிற்பாடு பூலோகத்தில் பாதி ரூபி, பாதி சுரூபியான வஸ்துவாயிருக்கிற மனுஷனை உண்டாக்கிறதுக்குச் சித்தமானார்."[29] என்கிறார். இங்கு அரூபி என்பது உயிர் உண்டு உருவமற்ற தன்மையையும், சுரூபி (சொரூபி) என்பது உருவத்தையும் குறிக்கின்றது. இவ்விரு நிலையும் கொண்ட மனிதன் ரூபி + சுரூபி வடிவமுடையவன் என்றும் கூறப்படுகின்றது. அவ்வகையே ரூபி என்பது 'சுரூபி' என்றாகி 'சுரூபம்' என்றும் 'சொரூபம்' எனவும் கூறப்படலாயிற்று. கிறிஸ்தவ வழிபாட்டில் உருவ வணக்கத்திற்கான ஏற்பின் வெளிபாடே கிறிஸ்தவச் சொரூபங்கள் ஆகும். கிறிஸ்தவத்தில் முதலில் கடவுளுக்கும், பின்னர் புனிதர்களுக்கும், புனிதப்பொருட்களுக்கும் வணக்கம் செலுத்தவும், உருவமளிக்கவும் ஒப்புதலிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே 'மரியாளியல்' முதன்மை பெறுவதோடு மரியாள் வழிபாடும், மரியாளிற்கான சொரூப நிலைப்படுத்தலும் முதன்மையுறுகிறது.

கிறிஸ்தவக் கலையில் மரியாள் விக்கிரகவியல் மற்றும் சொரூபநிலைப்படுத்தல் பற்றி நோக்க முன்னர் கிறிஸ்தவக் கலையில் உருவ வழிபாடும் கலையும் பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுதல் மரியாளின் விக்கிரகநிலைப்படுத்தலினை விளங்கிக்கொள்ள உதவியாக அமையும். மேற்கத்தேயத்தில் கிறிஸ்துவின் இறப்பின் பின்னர் கிறிஸ்தவம் வளரத் தொடங்கும் 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளாகிய ஆரம்பக் கிறிஸ்தவ காலத்தில் கிறிஸ்தவம் அரச மதமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இக்காலத்தில் நிலவறைகள், அட்ரியம் வீடுகளிலே இரகசியமாக வழிபாடுகள் இடம்பெற்றன. இக்காலப்பகுதியில் சிலை அல்லது சொரூப வழிபாடும் காணப்படவில்லை, அதற்குப் பதிலாகக் குறியீடுகளினை வழிபடுதல் காணப்பட்டது. கொன்றக்லூ(Kontoglou) குறிப்பிடுவது போன்று "எவ்வாறு வணங்கினார்களோ அவ்வாறே விக்கிரகவியலாளர்கள் வரைந்தனர்"[30] என்பதற்கேற்ப முதலில் குறியீட்டுத்துவமாகவே கிறிஸ்தவ உள்ளடக்கங்களினை ஆரம்ப கிறிஸ்தவ காலத்தில் வரையத் தொடங்கினர்.


4ஆம் நூற்றாண்டில் கொன்சன்ரைன் மன்னன் ஆட்சிக்கு வருவதற்கேற்ப கிறிஸ்தவம் அரசமதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் இக்கால பைசாந்தியக் கலைக்கும் அரசுக்கும் காணப்பட்ட நெருக்கமான உறவு, அடுத்ததாக வரும் யஸ்ரினன் மன்னனது ஆதரவு ஆகியவற்றினால் கிறிஸ்தவக் கலையும் செழிப்புற்று வளரத் தொடங்கும் அதேவேளை உருவ வழிபாடும், கலையில் உருவநிலைப்படுத்தல்களும் முதன்மை பெறலாயின. இக்காலத்தே புனித சடங்கு சார் பொருட்களின் பிரதிநிதித்துவங்கள், மதம் சார் முதன்மையானவர்களின் பிரதிநிதித்துவம் என்பன மொசைக்கிலும், சுவரோவியங்களிலும் இடம்பெறத் தொடங்கின. அதன் அடுத்த கட்டமாக உருவ வழிபாடு பிரசித்தமாவதோடு உருவம் என்பது அதிசயம் மிக்கதும், அதிசயம் நிகழ்த்தக் கூடியதுமாகப் பார்க்கப்பட்டது ஆனால் 7ஆம் நூற்றாண்டில் முன்னெழும் உருவ உடைப்புவாதம் உருவவழிபாட்டினை எதிர்ப்பதோடு, உருவ வழிபாட்டினைத் தடைசெய்தது. இருப்பினும், 8ஆம், 9ஆம் நூற்றாண்டுகளில் றொமனஸ்கியூவில் மீண்டும் உருவ வழிபாடு மீளெழுகின்றது. அதன் முழுநிலைக்கான ஆரம்பம் கொதிக் காலத்திலும் அதன் உச்சம் மறுமலர்ச்சிக் காலத்திலும் அடையப் பெறுகின்றது.

கிறிஸ்தவக் கலையில் மரியாள் தொடர்பாக பல்வேறு வாதங்கள் அதாவது மரியாளிற்கான விக்கிரகவியல் எவ்வாறு தோன்றியது? மரியாளினை வணங்குவது சரியானதா? ஏற்கப்பட்டதா?

29 இராச மாணிக்கம், *உபதேசம், தத்துவ போதகர் நூல்களின் சுருக்கம்.*

30 Monastery Icons, "The History &Symbolism of Icongraphy".

எனும் வினாக்கள் காணப்படினும் மரியாள் வழிபாடும், மரியாளிற்கான விக்கிரகவியலும் ஆரம்ப கிறிஸ்தவத்தின் இறுதிப் பகுதி, பைசாந்திய காலத்திலிருந்தே முதன்மை பெறத் தொடங்கிவிட்டது. பைசாந்திய காலத்தில் அரச போசிப்புடன் கலை வளர்வதற்கேற்ப கிறிஸ்தவக் கலை அதன் செழிப்பை வெளிப்படுத்தும் தளங்களில் ஒன்றாகிய மொசைக், சுவரோவியங்களில் கடவுளினைத் தாங்கியவர் எனும் பெறுமானத்தில் பாலகனுடன் அமர்ந்திருப்பவராயும், அவரின் தாய்மைக் குணவியல்பு முகத்தில் பிரதிபலிப்பதாகவும் உருவநிலைப்படுத்தத் தொடங்கினர். இதற்கு எடுத்துக்காட்டே ஹெகிய சோபியாவிலுள்ள (Hagia Sophia) கன்னி மரியாளும் குழந்தை யேசுவும் மொசைக் ஆகும் *(படம். 01)*. மதமும் அறிவும் ஒன்றிணையும் காலமாகிய 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகளில் முக்கியமாகும் கொதிக் கலையில் கன்னி மரியாள் கிறிஸ்தவத்தின் முக்கிய நாயகியாகக் கொண்டாடப்பட்டதோடு, யேசுவின் தாய், சொர்க்கத்தின் தாய், திருச்சபையின் மாதா, அனைத்துக் குழந்தைகளினையும் விரும்புபவர் எனும் கருத்தாக்கங்களின் அடிப்படையோடு தொடர்புபடலானார். இக்காலத்தில் இவருக்கென துதிப் பாடல்களும், தனித் தேவாலயங்களும், சொரூப வணக்கங்களும் கொண்ட புதிய பண்பாடு இங்கு உருவாகியது. அதனால் மரியாள் இங்கு பாரியளவிலான இயற்பண்புவாத சிற்பநிலைப்படுத்தலினையும் எட்டினார் *(படம். 02)*.




*படம். **01**(இடது): பைசாந்திய காலத்தின் ஹெகிய சோபியாவிலுள்ள கன்னி மரியாளும் குழந்தை இயேசுவும் மொசைக், **12**ஆம் நூற்றாண்டு, மூலம்: விக்கிப்பீடியா.*
*படம். **02**(வலது): கொதிக் காலத்திற்கான நோர்தடாம்* (Notre-Dame de Paris) *தேவாலயத்திலுள்ள காணப்பட்ட கன்னி மரியாளின் சிற்பம், **14**ஆம் நூற்றாண்டு, மூலம்: விக்கிப்பீடியா.*

பண்பாட்டிற்கும் மதத்துக்கும் கலைக்கும் இடையிலான உறவு மிக நெருங்கியது. அவ்வகையிலே கிறிஸ்தவம் தோன்றி வளர்ந்த பிராந்தியங்களில் கலையின் பேசுபொருளாகவும், கலை வெளிப்பாட்டில் தலையீடு செய்யும், கட்டுப்படுத்தும் கூறாகவும் மதம் காணப்பட்டதோடு கலை மதத்தினை பரப்பும் மொழியாகவும் காணப்பட்டது. மேற்கத்தேய மதமாகிய கிறிஸ்தவம் காலனியத்தின் வழி கீழைத்தேயத்தை வந்தடையும் போது காலனியவாதிகளால் கீழைத்தேயங்களில் ஊட்டப்பட்ட மேற்கத்தேயக் கிறிஸ்தவக் கலையானது அவ்வாறே

முற்காலத்தில் பின்பற்றப்பட்டாலும், பின்னர் அவ்வவ் பிராந்திய உள்ளூர்ப் பண்பாட்டுடன் இணைந்து ஓர் கலப்பொட்டு வடிவிலான புதிய கிறிஸ்தவக் கலையாக மாறுகின்றது. இதற்கு அவர்களது திருச்சபையிலிருந்த பண்பாட்டுப் பரவலாக்கம் பற்றிய ஒப்புதலும் வாய்ப்பளித்தது. "வெவ்வேறு நாகரிகங்கள், பண்பாடுகளில் ஓர் பிரதிநிதித்துவம் அல்லது படிமத்தின் உருவாக்கம், பரவுதல், உருமாற்றம் என்பன குறிப்பிட்ட கருப்பொருளின் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட தொகுப்பின் அடிப்படையிலான அறிவாகும்."[31] என்கிறார் பயலோஸ்க்கி (J.Bialostocki).

## யாழ்ப்பாணச் சொரூபங்களின் அழகியலும், பண்பாட்டுநிலையேற்பும்

> திருவழிபாட்டின் சிறப்புக்கு அதில் பயன்படும் திருப்பொருள்கள் தகுதியுடனும் எழிலுடனும் உறுதுணைபுரிய, திருச்சபை தனி அக்கறையுடன் கவனம் செலுத்தி வந்துள்ளது. இப்பொருள்களின் செய்பொருளிலோ, உருவிலோ, அழகொப்பனையிலோ தொழில் நுட்பக் கலையின் வளர்ச்சி காலப்போக்கிலே புகுத்தியுள்ள மாற்றங்களைத் திருச்சபை ஏற்றுக்கொள்கிறது[32].
>
> - *(திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம், எண் 122)*

எந்தவோர் பண்பாட்டு வடிவமும் அதற்கான பண்பாட்டு எல்லைப்பாடுகளினைத் தாண்டும் பொழுது அது உள்நுழையும் பண்பாட்டுக் கூறுகளினை விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக்கொண்டு தன்னைத் தகவமைத்தலின் வழி குறித்த பண்பாட்டோடு அன்னியப்படாது தன்னை ஸ்தாபித்துக் கொள்ளுதல் நிகழ்கின்றது. இது யாழ்ப்பாணத்தின் கத்தோலிக்க கிறிஸ்தவ மரியாள் சொரூபங்கள் பற்றிய வாசிப்பிலும் காணமுடிகின்றது. இச்சொரூபங்கள் ஒவ்வொன்றும் உள்ளூர் பண்பாட்டு நிலைப்படுத்தலாகவும் படைப்பாளியின் கருத்துநிலையின் மறுவிம்பமாகவும் நோக்கத்தக்கவை.

யாழ்ப்பாணத்தில் மாதா சொரூபங்களின் உருவாக்க வரலாறு பற்றி நோக்கின், போர்த்துகேயர் தாம் வரும்போது எடுத்து வந்த சொரூபங்களினையே முதலில் அமைக்கப்பட்ட ஆலயங்களில் ஸ்தாபித்தது மட்டுமல்லாது காலனிய வலைப்பின்னலில் தொடர்புற்றிருந்த நாடுகள் குறிப்பாக இந்தியா, ஸ்பெயின் போன்ற இடங்களிலிருந்தும் சொரூபங்களை எடுத்துவந்தனர். இவ்வாறு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுச் சிற்பங்களின் உசாவல்களினையும் பாதிரிமார்களின் வழிகாட்டலினையும் பின்பற்றி[33] உள்ளூர் கலைஞர்களால் சொரூபங்கள் அமைக்கப்பட்டன.[34] இவ்வாறு ஆரம்பகாலத்தில் அமைக்கப்பட்ட சொரூபங்கள் மரத்தினால் ஆனவையாகும். இவை காலனியவாதிகளால் கொண்டுவந்து ஸ்தாபிக்கப்பட்ட சுதைச் சொரூபங்களிலிருந்து ஊடக ரீதியாகவும், அவற்றின் அமைப்புநிலையிலும் வேறுபடுவதை அடையாளம் காணமுடியும்.

---

31 Biatostocki, *Iconography and Iconology*, 770-786.

32 கத்தோலிக்கத் திருச்சபை ஏடுகள் "இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்: திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம்".

33 "திருக்கலை உணர்விலும் திருவழிபாட்டு உணர்விலும் கலைஞர்கள் உருவாக்கிட, ஆயர்கள் தாமாகவோ கலையில் தேர்ச்சியும் ஆர்வமும் படைத்த தகுதி வாய்ந்த திருப்பணியாளர்களைக் கொண்டோ அவர்களை ஆதரித்துப் பேண வேண்டும். அன்றியும் கலைஞர்களை உருவாக்குவதற்கு, பொருத்தமாகத் தோன்றும் மண்டலங்களில் திருக்கலைப் பள்ளிகளையோ கலைக் கூடங்களையோ அமைப்பது போற்றத்தக்கது.": மேலது, எண் 127.

34 சனாதனன், *நவீனத்துவமும் யாழ்ப்பாணத்தில் காண்பியப் பயில்வும் ( 1920 - 1990)*, 41, 42.



*படம். 03: புதுமை மாதா (கோவாவிலுள்ளது), மூலம்: வலைத்தளம்.*

கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின்படி யாழ்ப்பாணத்திலே உள்ளூர் மேஸ்திரியால்[35] முதலாவதாகச் செய்யப்பட்ட பெண் வடிவம் 'புதுமை மாதா' எனப்படும் "வெற்றி மாதா" சொரூபம் ஆகும்*(படம். 03)*. சிலுவை யுத்தங்களின் போது மரியாளின் கோஸங்களும் சொரூபங்களும் எவ்வாறு முதன்மை பெற்றனவோ அவ்வாறே காலனியத்துக்குட்பட்ட நாடுகளின் வெற்றியிலும் மரியாள் முதன்மைப்படுத்தப்பட்டார். மரியாளே வெற்றியின் தாயாக முன்னிலைப்படுத்தப்பட்டார். அவ்வகையே, போர்த்துக்கேயரது யாழ்ப்பாண வெற்றியின் அடையாளமாக வெற்றிமாதா எனப்பட்ட சொரூபம் மரத்தில் உருவாக்கப்பட்டது. அதனை உள்ளூர் மேஸ்திரியான அன்னக்குட்டி என்பவர் செதுக்கும் போதும், பின்னரும் நிகழ்ந்த புதுமைகளால் அச்சொரூபம் "புதுமை மாதா" என அழைக்கப்பட்டதோடு, பண்ணைப் பகுதியில் அமைந்த கோட்டைக்குள் அமைவுபெற்ற புதுமை மாதா தேவாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டு போர்த்துக்கேய யாழ்ப்பாணக் கோட்டையும் புதுமை மாதா கோட்டை என அழைக்கப்படலாயிற்று. யாழ்ப்பாணம் ஒல்லாந்தாரால் கைப்பற்றப்படும்போது போர்த்துக்கேயர், கத்தோலிக்கப் பாதிரிமார் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும்போது இப்புதுமை மாதா சொரூபத்தினையும் தம்மோடு மறைமுகமாக எடுத்துச் சென்று தாம் நிலைகொண்ட கோவாவில் ஸ்தாபித்தனர்.[36] ஒல்லாந்த ஆட்சியின் பின்னர் யாழ்ப்பாணத்தவர்க்கு மத சுதந்திரம் கிடைக்கும்போது கோட்டைக்கு வெளியே புதியதோர் புதுமை மாதா ஆலயத்தினை அமைத்து மீண்டுமோர் புதுமை மாதா சொரூபத்தினைச் செய்து ஸ்தாபித்து வழிபடலாயினர். அவ்வகையே இம்மாதா சொரூபம் எவ்வளவுக்கு போர்த்துக்கேயரோடும், உள்ளூரவரோடும் நெருக்கமானது என்பதனை நோக்கலாம்.

35 மேஸ்திரிகள் என கட்டட வேலை செய்பவர்களினை அழைக்கும் வழக்கம் இந்தியாவில் காணப்படினும், யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கக் கிறிஸ்தவப் பாரம்பரியத்தின்படி கிறிஸ்தவ சொரூபங்களினைச் செய்பவர்களான கடையர்கள் தம்மை மேஸ்திரிகள் என்றே அடையாளப்படுத்துகின்றனர். இதனை சொரூபங்களினை உருவாக்கும் நபரான ரவி என்பவருடான கலந்துரையாடலின் அடிப்படையிலும், செல்வராஜ் என்பவரின் *வட இலங்கை பரிபாலினியாகிய யாழ்ப்பாண பரிசுத்த புதுமை மாதாவின் ஆலயச் சரித்திர வரலாறு* என்ற நூலில் புதுமைமாதா ஆலயத்திற்கான சொரூபம் நாவாந்துறை அன்னக்குட்டி மேஸ்திரியாரால் அமைக்கப்பட்டது என்ற கூற்றிலிருந்தும் அறியமுடிகிறது. கடைசல் தொழில் செய்யும் கலைஞர்கள் "மேஸ்திரு" என்ற சிறப்புப் பெயரால் விழித்துக் கூறப்படுவர். போர்த்துக்கேயத்தில் 'Meytre' என்ற சொல்லே மேஸ்திரி என அழைக்கப்படலாயிற்று. இதற்க்கு திறமையான வேலையாள் என்பது பொருள் எனக் கந்தையா, *தென்னிந்திய குலங்களும் குடிகளும்.* நூலில் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை வல்வெட்டித்துறையில் பாய்க் கப்பல் செய்பவர்களினையும் "மேஸ்திரி" என்றே அழைக்கின்றனர்.

36 சேவியர் வில்பிரட் "யாழ்ப்பாண கத்தோலிக்க தேவாலயச் சிற்பங்கள் ஒரு வரலாற்றுப் பார்வை".

புதுமை மாதா சொரூபம்(1614) உருவாக்கத்தினோடு, 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ சொரூபங்களினை அமைக்கத்தக்க உள்ளூர் கலைஞர்கள் காணப்படுவதற்கேற்ப உள்ளூர் கலைஞர்களால் சொரூபங்கள் அமைக்கப்படலாயின. உள்ளூர் கலைஞர்கள் நுட்ப ரீதியாக மேற்கத்தேய இயற்பண்புவாத, மாயவாதத்தினைக் கையாண்டாலும் காட்சியமைப்பு ரீதியாக உள்ளூர்நிலைப்படுத்தலின் முயற்சிகளினைப் புகுத்தியுள்ளமையினைக் காணமுடிகின்றது.[37] யாழ்ப்பாணத்துக்கு போர்த்துக்கேயரால் கொண்டுவரப்பட்ட மரியாள் சொரூபங்கள் சில கால்களில் காலணி அணிந்தவாறு, முகில்களில் காட்சி தருவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.[38] இவ்வாறாகக் காலணி காட்டும் தொடர்ச்சி யாழ் சிற்பிகளால் சில வடிவங்களில் கொண்டுவரப்பட்டாலும் பிற்காலத்தில் அதிகமான வடிவங்களில் காலணிகள் கொண்டுவரப்படாது வெறும் பாதங்களாகக் காட்டப்படுகின்றன.[39] இவ்வாறாகப் பிற்காலத்தில் வரும் தவிர்ப்பு என்பது ஓர் வகையில் இந்து மதத்தின் தெய்வங்கள், ஆலயம் சார் புனிதம் எனும் பிரக்ஞையினால் உள் வாங்கப்பட்டதாக இருக்கலாம்.





*படம். 04 (இடது): சாட்டி சித்தாந்திரை அன்னை ஆலயத்திலுள்ள கப்பலேந்தி மாதா, புகைப்படம்: ஆதித்தன் ஜேஸ்மின் கார்மேலா.*

*படம். 05(வலது): யாழ்ப்பாணம் தூய மரியன்னை பேராலயத்திற்கான வீதியிலுள்ள கொஞ்சேஞ்சி மாதா, புகைப்படம்: ஸ்ரீபன். கிருபாலினி*

இந்துப் பண்பாட்டில் எவ்வாறு ஒரு தெய்வம் பல வடிவங்களினை எடுக்கின்றதோ அவ்வாறு மரியாள் வடிவங்களும் உள்ளூர்ப் பண்பாட்டுக்குள் நுழையும்போது வெவ்வேறு விக்கிரகவியல்களினை எட்டியதோடு, வெவ்வேறுபட்ட விக்கிரகவியல்களிற்கு ஏற்பத் தமிழ்ப் பெயராடல்களினையும் கொண்டிருந்தன. அவை அதிகம் காட்சி கொடுத்த நிலைகள், வடிவங்களின் பெயர்களால் காரண இடுகுறிப் பெயர்களால் அழைக்கப்படலாயினர். மாசற்றவரினை உற்பவித்தவள் என்பதற்கேற்ப

37 சனாதனன், *நவீனத்துவமும் யாழ்ப்பாணத்தில் காண்பியப் பயில்வும் (1920 - 1990)*, 41, 42.

38 சில்லாலை கதிரை மாதா ஆலய மாதாவின் காலில் காலணியினைக் காணலாம். காலணி அணிந்துள்ளமையானது ஆடைக்கூடாக கீழ்ப் பாதம் வெளித் தெரிகையில் விரல்கள் காட்டப்படாது கால்களினை ஏதோவொன்றால் மூடியது போன்று மழித்துக் காட்டப்பட்டுள்ளதோடு, வர்ண வேறுபாடும் காட்டப்படுவதன் மூலம் அடையாளம் காண முடிகிறது.

39 சேவியர் வில்பிரட் "யாழ்ப்பாண கத்தோலிக்க தேவாலயச் சிற்பங்கள் ஒரு வரலாற்றுப் பார்வை".

"அமலோற்பவ மாதா" என்றும், செமாலையைக் கையிலேந்தியவள் எனும் அடிப்படையில் "செபமாலை மாதா" என்றும், பாலனைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தமையால் "காணிக்கை மாதா" என்றும், பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவர் என்பதால் "பரலோக மாதா" என்றும், வெற்றியின் அடையாளமாகையால் "வெற்றி மாதா" எனவும், புதுமைகள் புரிந்தமையால் "புதுமை மாதா" *(படம். 03)* எனவும், கொலையை விலக்கியமையால் "கொலை விலக்கி மாதா" *(படம். 11)* எனவும், கடும்புயலில் சிக்கிய கப்பலை ஆபத்தினின்று கரையேற்றியமையால் "கப்பலேந்தி மாதா"[40] *(படம். 04)*, மானிடரைக் கண்ணும் கருத்துமாகக் காப்பவள் எனும் வகையில் "கண்மணி மாதா",[41] அனைவரையும் அரவணைத்து அன்பு செய்வதால் "கொஞ்சேஞ்சி மாதா" *(படம். 05)* என்றும், உத்தரியத்தோடு கார்மேல் மலையில் காட்சி கொடுத்தமையால் "உத்தரிய மாதா" *(படம். 06)* அல்லது "கார்மேல் மாதா" (ஆங்கிலத்தில் 'கார்மேல் அன்னை') என்றும், கதிரையில் அமர்ந்திருப்பதால் "கதிரை மாதா"[42] *(படம். 07)* என்றும் மேலும் வியாகுலமாதா, தேவ இரகசியத்தின் ரோஜா மாதா என இன்னும் பல்வேறு பெயர்கள் சூடப்பட்டவராகப் பல்வேறுபட்ட சொரூபநிலைப்படுத்தலுடன் மரியாள் வணக்கம் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது.





*படம். 06 (இடது): வசாவிளான் உத்தரிய மாதா ஆலயத்திலுள்ள உத்தரிய மாதா, மூலம்: முகப்புத்தகம்.*
*படம். 07 (வலது): சில்லாலை கதிரைச் செல்வி ஆலயத்திலுள்ள கதிரை மாதா, மூலம்: வலைத்தளம்.*

40 கப்பலாத்தி அல்லது கப்பலேந்தி மாதா சாட்டி சித்தாந்திரை அன்னை ஆலயத்தில் காணப்படுகின்றார்.
41 கிளாலியில் கண்மணி. மாதா கோவில் காணப்பட்டதோடு சிற்பமும் காணப்பட்டது.
42 ""யாழ்ப்பாணத்தின் சின்ன ரோம் என அழைக்கப்படும் சில்லாலையிலுள்ள கதிரைச் செல்வி ஆலயத்திலுள்ள் கதிரை மாதா சொரூபத்தில் மரியாள் இயேசு கிறிஸ்துவை மடியில் தாங்கிக் கதிரையில் அமர்ந்திருப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வழக்கமாக மரியாள் கிறிஸ்துவினை அணைத்தபடி நிற்பதாகக் காட்டப்படுவதிலிருந்து இச்சொரூபம் மாறுபாடாக உள்ளது. இச்சொரூபத்தில் கதிரையினை நோக்கின் காலனியச் செல்வாக்கினைத் தெளிவாக காண முடிகின்றது அவ்வகையே போர்த்துகேய மிஷனரியானது 1544 இல் மதத்தைப் போதிக்க வந்த காலகட்டத்தில் தம்மோடு கொண்டுவந்த சொரூபமாகக் கருதப்படுகிறது"": சில்லாலை சின்ன ரோமில் கதிரைச் செல்விக்குப் பெருவிழா.

இந்தவகையில் யாழ்ப்பாணத்து மேஸ்திரிகளால் அமைக்கப்பெற்ற மரியாள் சொரூபங்களினை நோக்கும்போது அவை யாழ்ப்பாணத்திற்கே உரிய பெண்ணிற்கான முக அழகியலையே வெளிப்படுத்துகிறது *(படம். 05, 13)*. கன்னத்தோடு ஒட்டிய தசைகள், பரந்த நெற்றி, குழி விழுந்த கண்கள் போன்ற அமைப்பும், ஆடை அமைப்பானது நீண்டதும் அதேநேரம் நெருக்கமான மடிப்புகளைக் கொண்டனவாகவும் விளங்குகின்றன. எனினும் போர்த்துக்கேயரால் கொண்டுவரப்பட்ட சிற்பங்களை நோக்கும்போது உப்பிய அழகிய கன்னங்கள் கொண்டனவாயும் ஆடை அமைப்பு மென்மையான மடிப்புகளைக் கொண்டனவாகவும் விளங்குகின்றன. இதனைவிட தலை போர்த்தப்பட்ட மொட்டாக்கு, இடுப்புப்பட்டி, கால் வரை நீண்ட ஆடை என இரு மரபிலும் தொடரப்பட்டுள்ளன. மரியாள் யூதப் பெண்ணாக விளங்கியமையால் உடலை மூடிய ஆடை என்பது அவரது பண்பாடு சார் குறிகாட்டியாகும். இவ்வாடை அமைப்பு இங்கு அவ்வாறே தொடரப்பட்டது ஆனால் சில நாடுகளில் ஆடை அமைப்பில் மாற்றம் கொண்டுவருதல் மூலம் தம் பண்பாட்டிற்குரியவராக மாற்றியமைத்துள்ளமையினைக் காண முடிகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக யப்பானில் கிறிஸ்தவம் பரவலடையும்போது மரியாள் சொரூபத்தின் ஆடை அமைப்பானது அவர்களது பண்பாட்டுக்கு ஏற்புடைமையின்மையினால் சில சிற்பங்களில் கிமோனா ஆடையினை மரியாளுக்கான ஆடையாக மாற்றிச் சொரூபங்களில் காட்டப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது*(படம். 08)*. இவ்வாறாக அவ்வவ் பண்பாட்டிற்கேற்ப மரியாளிற்கான ஆடை, அலங்காரம் செய்வதனூடாக தமது பண்பாட்டிற்குரிய, தமக்கு நெருக்கமான பெண்ணாக ஒவ்வொரு சமூகமும் மரியாளை முன்னிலைப்படுத்தியது. இதற்கான சாத்தியப்பாடுகளை கத்தோலிக்க கிறிஸ்தவமும் வழங்கியது என்பதற்கு திருக்கலை பற்றிய விதிகளைத் திருத்தி அமைத்தல் பற்றி திருவழிபாட்டில் சொல்லப்பட்டுள்ள கூற்று சான்றாகும்.

> " திருக்கட்டடங்களைத் தகுதியாகவும் பொருத்தமாகவும் நற்கருணைப் பேழையின் மேன்மை, அமைப்பிடம், பாதுகாப்பு திருமுழுக்குத் தொட்டியின் வசதி, மாண்பு திருவுருவங்கள், ஒப்பனை, அணிகலன்கள் ஆகியவற்றின் பொருத்தமான அமைப்பு முறை. சீரமைக்கப்பட்ட திருவழிபாட்டுடன் இயைந்து செல்லாத விதிகளைத் திருத்தி அமைக்க வேண்டும், அல்லது நீக்க வேண்டும். அதற்குத் துணைபுரிவனவற்றை வைத்துக்கொள்ள வேண்டும் அல்லது புதிதாகச் சேர்க்க வேண்டும். ...... வழிபாட்டிற்கு உதவும் பொருள்கள், திருஉடைகள் ஆகியவற்றின் மூலப்பொருள் மற்றும் வடிவம் என்பனவற்றைப் பொறுத்த அளவில், இக்கொள்கை விளக்கம் எண் 22 இல் கண்ட விதியின்படி அந்தந்த இடங்களின் தேவைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ப மாற்றி அமைத்துக்கொள்ள மண்டல ஆயர்கள் பேரவைகளுக்கு அதிகாரம் உண்டு."[43]


*-( திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம், எண் 128)*

மரியாள் வடிவங்கள் பல்வேறு பண்பாடுகளின் உள்ளே உள்நுழைகையின் போது குறித்த பிராந்தியத்தோடு தன்னை இணைத்துக் கொள்வதற்காக அப்பண்பாட்டின் கூறுகளினை உள்வாங்கிய பிரதிநிதித்துவமாக மரியாள் வடிவங்கள் மாறியுள்ளதனை யப்பான், சீனாவில் இலகுவாக இனங்காணமுடியும். யப்பானில் கிறிஸ்தவம் இலகுவாக உள்வாங்கப்படவில்லை. தொகுகாவ காலத்தில் (Tokugawa period) அன்னிய மதமான கிறிஸ்தவம் தடை செய்யப்பட்டதோடு கிறிஸ்தவத்தினைப் பின்பற்றியவர்கள் சிறையில் இடப்பட்டனர். எவ்வாறு யாழ்ப்பாணத்திலே

43 கத்தோலிக்கத் திருச்சபை ஏடுகள் "இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்: திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம்".

புரட்டாஸ்தாந்தின் இறுக்கமான காலத்தில் இந்துக்கள் மறைமுகமான உருவவழிபாடு செய்தனரோ அவ்வாறே யப்பானிய கிறிஸ்தவர்களும் முதலாம் நூற்றாண்டு தொடக்கம் பௌத்த மரபில் காணப்பட்டவரும் இரக்கத்தின் தாயாகக் கொண்டாடப்பட்டவருமான கினோன் பெண் தெய்வத்தினை மரியாள் வடிவமாக மாற்றிக் கொள்வதோடு வழிபாடும் இயற்றியுள்ளனர்.இவ்வாறு இணைந்து கொள்வதனால் 'மரியா கன்னோன்' எனவும் மரியாள் இங்கு அழைக்கப்பட்டார் *(படம். 09)*.[44] இவ்வாறு பண்பாடுகளுக்கேற்ப பிரதிநிதித்துவங்களில் மாற்றம் கொண்டுவருதலினை கத்தோலிக்கப் பிரகடனங்கள் மற்றும் கீழைச்சபையின் ஏற்பு சாத்தியப்படுத்தியுள்ளது. அவ்வகையே யாழ்ப்பாணத்தின் மரியாள் சொரூபங்களின் பிரதிநிதித்துவங்களில் சில சுட்டிப்பான மற்றும் தமிழ் பண்பாட்டுக்குரிய பொதுநிலைசார் அடையாள மாற்றங்களைக் காணக்கூடியதாகவுள்ளது.






*படம். 08 (இடது): கிமோனோ ஆடையுடனான யப்பானிலுள்ள மரியாள் சிற்பம்.மூலம்: வலைத்தளம்.*
*படம். 09 (வலது): மரியா கன்னோன் யப்பானிலுள்ள சிற்பம், மூலம்: வலைத்தளம்.*

மாதகல் தோமையர் ஆலயத்தில் உள்ள மரியாள் சொரூபமானது "கொண்டை மாதா"வாகக் காட்டப்பட்டுள்ளார் *(படம். 10, 11)*. கொண்டை அணிதல் என்பது தமிழர் பண்பாட்டில் காணப்படும் மரபு. வழக்கமாக மாதா சொரூபங்கள் மொட்டாக்கினால் மூடியதாகக் காட்டப்படுதலிற்கு ஏற்ப தலை அலங்காரம் சுட்டிப்பாக கொண்டுவரப்படுவதில்லை. இதற்கு மாற்றீடாக இங்கு மாதாவின் தலைப்பகுதியில் மாற்றம் கொண்டு வரப்பட்டிருப்பதனைக் காணக் கூடியதாகவுள்ளது. இவ்வாறாக தலையலங்காரம் செய்யப்பட்டமை யாழ்ப்பாணத்தில் ஏனைய மாதா சொரூபங்களின் பொதுப்பண்பாகவும் இல்லை. இந்தக் கொண்டை அமைப்பினை நோக்கின் ஆரம்பகாலத் தமிழ் திரைப்படங்களில் பெண் சினிமா நட்சத்திரங்கள் அணிவது போன்று சீவி முடியப்பட்ட உயர் கொண்டை அமைப்பாக உள்ளது . இது சமகால வெகுசனப் பண்பாட்டின் நடப்பு வழக்குச் செல்வாக்காக நோக்கலாம். இதையொத்த வெகுசனப் பண்பாட்டுத் தாக்கம் இந்துக்கோயில்களின் சுவரோவியங்களில் அம்மன் படங்களினை வரைவதிலும் உள்வாங்கப்பட்டுள்ளதனை அவதானிக்கலாம்.

44 "CHRISTIANITY IN JAPAN"





*படம். 10 (இடது): மாதகல் தோமையர் ஆலயத்திலுள்ள கொண்டை மாதாவின் கொண்டை பக்கத்தோற்றம், புகைப்படம்: ஆதித்தன் ஜேஸ்மின் கார்மேலா.*
*படம். 11 (வலது): மாதகல் தோமையர் ஆலயத்திலுள்ள கொண்டை மாதாவின் கொண்டை, புகைப்படம்: ஆதித்தன் ஜேஸ்மின் கார்மேலா.*

கிறிஸ்தவ சொரூபங்களில் மேற்கத்திய முறையிலாக சொரூபத்துடன் ஆடை காட்டப்பட்டிருந்தாலும் மேலதிகமாக, மரியாள் உடுத்தியிருப்பது போன்ற ஆடையினை தைத்து உடுத்துதல், போர்த்தல் என்பது யாழ்ப்பாணத்தில் சில தேவாலயங்களில் காண முடிகின்றது ஆனால் சேலையினை உடுத்துதல் அல்லது அணிவித்தல் என்பது வழக்கமற்றதாகவே காணப்பட்டது. ஊர்காவற்றுறை மெலிஞ்சி முனைப் பகுதியில் காணப்படும் அன்னை வேளாங்கன்னி மாதாக்கு சேலை ஆடையாக அணியப்படுகின்றது. இதனால் இவர் 'சேலை மாதா' *(படம். 12)* எனவும் அழைக்கப்பட்டார். இங்குள்ள சொரூபமானது வேளாங்கன்னி மாதாக்கான விக்கிரகவியலினைக் கொண்டிருக்கின்றபோதும் அச்சொரூபத்தின் மீது சேலை அணிவிக்கப்படுகின்றது. இவ்வாறே குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் கொலை விலக்கி மாதாவிற்கும் விசேட தினங்களில் சேலை உடுத்தப்படுகின்றது*(படம். 13)*.

இவ்விரு இடங்களிலும் மேற்கத்தேய முறைமையிலான ஆடை சொரூபத்தினோடு இணைந்ததாய் வடிக்கப்பட்டிருப்பினும், இந்து ஆலயங்களிலே பெண் தெய்வ விக்கிரகங்களிற்கு மேல் சேலை அணிவித்தலை ஒத்ததாக இங்கும் இடம்பெறுகின்றது. கிறிஸ்தவம் கீழை நாடுகளிற்கு பரவுகையின் போது இந்து ஆலயங்களில் திருவிழாக்கள் அல்லது உற்சவங்கள் கொண்டாடுதல், வீதியுலா வருதல் போன்ற மரபுகளினை உள்வாங்கிக் கிறிஸ்தவப் பண்பாட்டிற்குள் தகவமைத்தலின் வழி கத்தோலிக்க தேவாலயங்களிலும் திருவிழாக்கள், மரியாளின் சொரூபத்தினை இறுதி நாளில் வீதியுலா எடுத்து வருதல் போன்றன நிகழத் தொடங்கின. இவ்வகையிலே மரியாளிற்கு சேலை அணிவித்தலும் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும். இன்றுவரை இவ்வழக்கம் கைக்கொள்ளப்படுதலானது யூதப் பெண்ணிற்கான ஆடையினை மறைத்துச் சேலை போர்த்த உடலாக மாற்றப்படுதலின் ஊடாக அவள் யூதப்பெண் அல்ல உள்ளூர்ப் பெண் தெய்வங்கள் போன்றவரே என எண்ண வைக்கின்றது. சேலையுடன் கூடிய மரியாள் என்பது குறித்த

பண்பாட்டு நிலவரத்திலே கிறிஸ்தவமும், கிறிஸ்தவர்களும் தம்மை தகவமைத்துக் கொண்டதன் வெளிப்பாடே ஆகும். இவ்வழக்கம் தென்னிந்தியத் தேவாலயங்கள் சிலவற்றிலும் காணமுடிகிறது.





*படம். 12 (இடது): "சேலை மாதா" எனப்படும் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை அன்னைவேளாங்கண்ணி, புகைப்படம்: ஆதித்தன் ஜேஸ்மின் கார்மேலா.*
*படம். 13 (வலது): சேலையுடன் குருநகர் புனித யாகப்பர் ஆலய கொலைவிலக்கி மாதா, மூலம்: முகநூல்.*

மரியாள் சொரூபங்களின் ஆடை, அலங்காரம், முக அமைவு, பெயராடல்கள் மற்றும் தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பது ஒருவகையில் உள்ளூர்மயப்பட்ட கத்தோலிக்கத்தின் வெளிப்பாடாக நோக்கினும் மறுபுறம் இச்சொரூபங்கள் யாழ்ப்பாணத்து மேஸ்திரிகளால் செய்யப்படும் போது தமக்கான விருப்பு வெறுப்பினை உள்வாங்கக் கிடைத்த சாத்தியங்கள், கிறிஸ்தவத்தினைத் தமிழ் பண்பாட்டின் ஓர் அலகாக நிலைப்படுத்தல், மரியாள் வடிவங்களினை இலட்சியநிலைப்படுத்தலிற்கு அப்பால் மிக யதார்த்தநிலைக்கு எடுத்துச் செல்லுதல் ஆகியவற்றினாலானதாகவும் நோக்கலாம்.

ஒரு நாட்டினை, நிலத்தினைத் தாயாகப், பெண்ணாகப் பார்க்கும் மரபு கீழைத்தேயத்திலும் மேலைத்தேயத்திலும் காணப்படும் பொதுவான பண்பாகும். அவ்வகையே 1948 ஆம் ஆண்டில் இலங்கைத் தேசமானது காலனியவாதிகளிடமிருந்து சுதந்திரமடைந்தது. இதனைக் கொண்டாடும் வகையிலே இலங்கை முழுவதும் மரியாளது அடைக்கலத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதன் நினைவாக உருவாக்கப்பட்ட மாதா சொரூபம் "லங்கா மாதா"வாக அறியப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டாள். இச்சொரூப நிலைப்படுத்தலில் மரியாள் இலங்கையின் மாதாவாகவும் பரிபாலினியாகவும் பாதுகாவலியாகவும் கருதப்பட்டார். "லங்கா மாதா" எனும் வடிவமானது இலங்கை வடிவத்தின் முன்னால் மரியாள் நிற்பதாகச் சித்தரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் லங்கா மாதா சொரூபமானது சில்லாலை வடக்கில் இலங்கை மாதா வீதியிலுள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது *(படம். 14)*. இங்கு மாதா சொரூபத்தின்

பின்னால் இலங்கை போன்ற வடிவம் இரும்பினால் வடிவமைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. அண்மையில் இடம்பெற்ற மீள்நிர்மாணப்பணியின்போது அதனை நீக்கிவிட்டனர் ஆனால் வருடாந்த உற்சவ காலத்தில் தற்காலிகமாக றெஜிபோமினாலான இலங்கை வடிவத்தினை மாதாவின் பின்னால் செய்து வைத்து வருகின்றதோடு தற்பொழுது இலங்கை மாதா என்று அழைத்தும் வருகின்றனர். இவ்வாறே யாழ்ப்பாணத்தின் முதற் சொரூபமாகக் காணப்பட்டதும் இன்று கோவாவில் காணப்படுகின்றதும் "யாழ்ப்பாண மாதா" எனும் சொரூபமும் போர்த்துக்கேயர் காலத்தில் "புதுமை மாதாவே புதிய இராய்ச்சியத்தின் பரிபாலினி" (யாழ்ப்பாணத்தினை ஆளுபவள்) என்று யாழ்ப்பாண இராய்ச்சியத்தின் தாயாகவும், யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்ட "வெற்றி மாதா"வாகச்(Our Lady of Victory) சிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது *(படம். 1)*.



*படம். 14: இலங்கை மாதா(சில்லாலை), புகைப்படம்: கிராமவாசி.*

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப காலத்தில் உருவான யாழ்ப்பாணக் கைவினைஞர்களின் வெளிப்பாடாகிய கிறிஸ்தவச் சிற்பங்கள் தனித்தன்மையானவை. ஒவ்வொரு சிற்பங்களும் அக்கைவினைஞர்களின் திறன், பண்பாட்டு மாற்றம் போன்றவற்றை வாசிக்கத்தக்க சாத்தியத்தினை வழங்கின ஆனால் பின்னர் ஏற்படும் ஊடக மாற்றங்களான பிளாஸ்ரபரிஸ், மோளர், கண்ணாடி இழை என்பவற்றின் வருகையினால் சொரூபங்களிடையே வேறுபாடுகள், தனித்தன்மைகள் மறைந்து ஓர் ஒத்த தன்மை கொண்டனவாய் சொரூபங்கள் யாவும் ஒரே அமைப்பு முறையாக மாறத் தொடங்கின.

போர்த்துக்கேயரால் அறிமுகப்படுத்தப்பட்டதும் பிரித்தானிய காலத்தில் பெரிதளவில் பரவலடைந்ததுமான கத்தோலிக்க மதமானது யாழ்ப்பாணத்திற்குள் தன் இருப்பினை ஸ்தாபிக்கும் போது மதத்தினை இலகுவாக பரப்புதலிற்காகத் தம்மைத் தமிழ்ப் பண்பாட்டிலிருந்தும், இந்துப் பண்பாட்டிலிருந்தும் அந்நியப்படாது இருத்தலிற்காக நேரடியாகவும், மறைமுகமாகவும் விரும்பியும் விரும்பாமலும் தம்மைத் தகவமைத்துக் கொண்டுள்ளதனைக் காணமுடிகின்றது. கத்தோலிக்க கிறிஸ்தவம் அடிமனதில் தன்னை கிறிஸ்துவின் அவனாகவும், அவளாகவும் நிலைநிறுத்திக் கொள்வதனைக் கையாண்டாலும், வெளிப்பூச்சில் தன்னை குறித்த பண்பாட்டோடு நெருக்கமாகப்

பிணைத்தலில் மிகவும் கவனமாகச் செயற்பட்டுள்ளதனையும் காணலாம். ஓர் வகையில் யாழ்ப்பாணத்தில் மரியாள் வழிபாடு இந்துமரபின் பெண் தெய்வங்களின் வழிபாட்டுக்கு அண்மித்த நிலைக்கு சென்றிருப்பினும் இந்து மரபின் பெண் தெய்வங்கள் அதிகம் குணவியல்பின் அடிப்படையில் மரியாளினின்று தூரமானவர்களாகவே காணப்படுவதனை மறுக்கவியலாது.

*(இக்கட்டுரையானது 2010ஆம் ஆண்டு ஜேஸ்மின் கார்மேலாவால் யாழ்ப்பாண நுண்கலைத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட "யாழ்ப்பாண கத்தோலிக்கத் தேவாலயச் சிற்பங்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை" என்ற ஆய்வுக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டதும், 2013ஆம் ஆண்டு நுண்கலைத்துறை ஏற்பாடு செய்த* "Female Deities and Devotion in Sri Lanka: Rituals, representation and resilience " *எனும் தேசிய கருத்தரங்கில் ஜேஸ்மின் கார்மேலா மற்றும் கிருபாலினியால் வாசிக்கப்பட்ட "மரியாள் அவதாரங்கள்" என்ற கட்டுரையின் திருத்தப்பட்ட வடிவமுமாகும்.)*

**உசாத்துணை**


Biatostocki, J., Iconography and Iconology, in Encyclopedia of World Art, New York, 1963.

Brittanica, "Mother Goddess". accessed on 05.12. 2020. https://www.britannica.com/topic/mother-goddess.

Brittanica, "Catholic", accessed on 01.02. 2021. https://www.britannica.com/topic/catholic.

"Catholic Church Merging 'Virgin' Mary with Mother Earth Goddess, Pachamama.", accessed on 12.12. 2020. https://pulpitandpen.org/2019/12/26/catholic-church-merging-virgin-mary-with-mother-earth-goddess-pachamama.

"CHRISTIANITY IN JAPAN", accessed on 01.02. 2021. https://www.onmarkproductions.com/html/maria-kannon.html -Maria Kannon -.

"Divine Mothers: The Influence of Isis on the Virgin Mary in Egyptian Lactans-Iconography" accessed on 12.12. 2020. https://www.researchgate.net/publication/312192708_Divine_Mothers_The_Influence_of_Isis_on_the_Virgin_Mary_in_Egyptian_Lactans-Iconography; Sabrina Higgins.

Encyclical " ENCYCLICAL OF POPE PIUS XII ON PROCLAIMING THE QUEENSHIP OF MARY TO THE VENERABLE BRETHREN, THE PATRIARCHS, PRIMATES, ARCHBISHOPS, BISHIOPS, AND OTHER LOCAL ORDINARIES IN PEACE AND COMMUNION WITH THE HOLY SEE." accessed on 05.12. 2020. http://www.vatican.va/content/pius-xii/en/encyclicals/documents/hf_p-xii_enc_11101954_ad-caeli-reginam.html.

"ISIS IS A VIRGIN MOTHER!!!", accessed on 12.12. 2020. https://stellarhousepublishing.com/isis-is-a-virgin-mother/.

Marialis Cultus " FOR THE RIGHT ORDERING AND DEVELOPMENT OF DEVOTION TO THE BLESSED VIRGIN MARY", accessed on 12.12. 2020. http://www.vatican.va/content/paul-vi/en/apost_exhortations/documents/hf_p-vi_exh_19740202_marialis-cultus.html.

"Mary: Meaning & History" accessed on 12.12. 2020. https://www.behindthename.com/name/mary.

Monastery Icons, "The History &Symbolism of Icongraphy". accessed on 05.12. 2020.https://www.monasteryicons.com/product/The-History-and-Symbolism-of-Iconography/did-you-know.

Ragupathy, P., *Early settlement in Jaffna: An Archeological survey.* Chennai: Thimilar Ragupathy, 1987.

Waduge, Shenali D., " Our Lady of Madhu Church is built on an ancient Pattini Amma Temple site" in BHARATA BHARATI, Jan 13, 2015. accessed on 12.12. 2020. https://bharatabharati.in/2015/01/13/our-lady-of-madhu-church-is-built-on-an-ancient-pattini-amma-temple-site-shenali-d-waduge/.

இராச மாணிக்கம், ச., *உபதேசம், தத்துவ போதகர் நூல்களின் சுருக்கம்*, தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழகம். 1965.

கத்தோலிக்கத் திருச்சபை ஏடுகள் "இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்: திருவழிபாடு பற்றிய கொள்கை விளக்கம்", http://bibleintamil.com/churchdoc/03liturgy.html.

கந்தையா, த. சி., *தென்னிந்திய குலங்களம் குடிகளும்.* மதுரை, நூற் பதிப்புக் கழகம், 1958.

குலேந்திரன், பொன்., "இலங்கையில் கண்ணகியம்மன் வழிபாடு", accessed on 05.12. 2020. http://kanaga_sritharan.tripod.com/kannaki.html.

சனாதனன், தா., *நவீனத்துவமும் யாழ்ப்பாணத்தில் காண்பியப் பயில்வும் ( 1920 - 1990).* கொழும்பு: குமரன் புத்தக இல்லம் வெளியீடு, 2018.

"சில்லாலை சின்ன ரோமில் கதிரைச் செல்விக்குப் பெருவிழா", தினகரன், accessed on 01.02. 2021. http://archives.thinakaran.lk/2011/08/11/?fn=r1108113.

"சிறுதெய்வ வகைப்பாடு", accessed on 12.12. 2019. http://www.tamilvu.org/courses/degree/a061/a0614/html/a0614224.html.

செல்வராஜ், ஞா. ம., *வட இலங்கை பரிபாலினியாகிய யாழ்ப்பாண பரிசுத்த புதுமை மாதாவின் ஆலயச் சரித்திர வரலாறு, புதுமை மாதா கோவில் நிர்வாகம், 1958.*

சேவியர் வில்பிரட், ஜேஸ்மின் கார்மேலா., "யாழ்ப்பாண கத்தோலிக்கத் தேவாலயச் சிற்பங்கள் - ஒரு வரலாற்றுப் பார்வை", (ஆய்வுக் கட்டுரை -நுண்கலைத் துறை - 2009. (பிரசுரிக்கப்படாதது).

சேவியர், சங். பி. பி., *மரியன்னையின் வாழ்க்கை வரலாறு.* புதுவை மாதா கோவில், 1954.

ஞானப்பிரகாசர், சுவாமி., மாதாவோ - அம்மனோ?, The Jaffna Diocean Literature Committee, 1932.

"மரியாவின் வாழ்வு", accessed on 01.02. 2021. https://sites.google.com/site/romancatholictamil/

யேசுதாசன், இ., *கிறிஸ்தவ வாழ்வு* அமதி குருமடம், எம்பிட்டியா, 2002.

விக்சனரி,"கன்னி". accessed on 01.02. 2021.https://ta.wiktionary.org/wiki/%E0%AE%95%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%A9%E0%AE%BF.

ஜெயசீலன், ஜெ. இ., *ஆசிய திருச்சபை வரலாறு.* யாழ்ப்பாணம்: வளன் ஆச்சிரமம், 2007.

ஜெயசீலன், ஜெ. இ., *யாழ்ப்பாண திருச்சபை வரலாறு,* யாழ்ப்பாணம்: வளன் ஆச்சிரமம், 1997.